# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.

தொலைபேசி: 044–22201337

மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

Website: www.tnlbo.tn.gov.in


**முன்னிலை : திரு மகேசன் காசிராஜன் இ.ஆ.ப (ஓ)**

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 92/மா/2024

நாள். 01.09.2025

| | | |
|---|---|---|
| திரு. பொன் தம்மபாலா<br>திருத்துறைப்பூண்டி<br>திருவாரூர் மாவட்டம் | --- | முறையீட்டு மனுதாரர் |
| ஆணையர்,<br>தஞ்சாவூர் மாநகராட்சி. | --- | எதிர்மனுதாரர் |

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி, தெற்கு வீதி, அறிவு சார் விஹார், எஸ்.எம்.எச். காம்பளக்ஸ் எண்.13–1/1–கே, என்கிற முகவரியை சேர்ந்த திரு.பொன் தம்மபாலா என்பவரது 30.07.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 01.08.2024 அன்று பெறப்பட்டு, 92/மா/2024 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி, தெற்கு வீதி, அறிவு சார் விஹார், எஸ்.எம்.எச். காம்பளக்ஸ், எண்.13–1/1–கே என்கிற முகவரியை சேர்ந்த திரு.பொன் தம்மபாலா என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள புகார் மனுவில் கீழ்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

> "நான் மேற்கண்ட முகவரியில் வழக்கறிஞர் பணி செய்து வருகின்றேன். நான் மேலும், இந்திய அரசியலமைப்பு தந்தை பவுண்டேஷன் என்ற அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலராகயிருந்து சமூக பணி செய்து வருகின்றேன். நான் சார்ந்த அறக்கட்டளையின் சார்பாக பல்வேறு அரசிற்கு கோரிக்கை மனுக்கள் பொதுநலன் கருதி அனுப்பியும் அதன்படி அரசு நடவடிக்கையும் எடுத்து வருகின்றது. மேலும் பொருளாதார பின்தங்கி மக்களுக்கும், முதியோர், குழந்தைகளுக்கும் பல்வேறு சட்ட உதவிகளை செய்து வருகின்றேன்.
>
> 1. நான் இந்த மனுவின் மனுதாரர் ஆவேன். எனக்கு இந்த மனுவின் சங்கதிகள் அனைத்தும் அறிந்தவகையில் உண்மை என்று உறுதி கூறுகின்றேன். தஞ்சாவூர் மாநகராட்சி, புதிய பேருந்து நிலையம், நியூ ஹவுசிங் யூனிட், வி.பி.கார்டன் எண்.1/3 என்ற முகவரியில் (காமாட்சி மெடிக்கல் சென்டர் அருகில்) இயங்கி வரும் ஹோட்டல் ஆலியாவினை நடத்தி வரும் முகமது ஹரூன் மற்றும் அவரது மனைவி சகிலா பானு ஆகியோர் மேற்படி ஹோட்டல் ஆலியா கட்டிடத்தின் அனுமதி பெறாமல் பல்வேறு முறைகேடு செய்தும், தரைதளம் 950 சதுரடி, முதல் தளம் 950 சதுரடி அனுமதியினை பெற்று தரை தளம் மற்றும் முதல் தளம் தலா 2200 சதுரடியில் அரசின் விதிமுறைகளை பின்பற்றாமலும், சட்டத்திற்கு புறம்பான வகையில் கட்டிடம் கட்டியுள்ளனர். மேலும் தரைதளம், முதல்தளம் (G+1) என தஞ்சாவூர் மாநகராட்சியில் அனுமதி 2 பெற்று தரைதளம்

மற்றும் 5 மாடி கட்டிடங்கள் (G+5) என கட்டிடத்தினை சட்டம் விதிகளுக்கு புறம்பாக கட்டியுள்ளனர். இதனால் பொதுமக்களுக்கும், ரோட்டின் ஓரத்தில் கட்டிடம் இருந்து வருவதால் எந்த நேரத்திலும் இடிந்து பேரிழப்பு அபாயம் ஏற்படும் சூழல் இருந்து வருகின்றது. மேற்படி நபர்கள் ஹோட்டல் ஆலியா என்ற பெயரில் மாநகராட்சியிடம் 2 கழிப்பறைக்கு மட்டுமே அனுமதி பெற்று 22 கழிப்பறையினை கட்டி மாநகராட்சிக்கு பல லட்சம் இழப்பு ஏற்படும் விதமாக மோசடி செய்துள்ளனர். மேலும், மேற்படி ஹோட்டலுக்கு கார் பார்க்கிங் வசதியில்லாமல் சாலையினை ஆக்கிரமணம் செய்து கார் பார்க்கிங் செய்து வருகின்றனர். இதனால் விபத்து நடக்க வாய்ப்புள்ளது. இதனால் மாநகராட்சிக்கு பல இலட்சம் இழப்பு ஏற்பட்டுள்ளது, தஞ்சாவூர் மாநகராட்சியிடம் உண்மைகளை மறைத்து தரைத்தளம் மற்றும் முதல்தளத்திற்குண்டான வரிவிதிப்பு எண்.107/051/02109 என்ற கோப்பின்படி தொடர்ந்து ஏமாற்றம் செய்தும், மோசடி செய்தும், அரசிற்கு வேண்டுமென்றே திட்டமிட்டே வருமான இழப்பு செய்து வருகின்றனர். மேற்படி ஹோட்டலில் அனைத்தும் சொகுசு அறைகளாக உருவாக்கி பலகோடி வருமானம் பெற்று அதற்குண்டான வரியினை அரசிற்கு செலுத்தாமல் வருமான இழப்பு ஏற்படுத்தியுள்ளனர். மேலும் அனுமதி பெறாமல் கட்டப்பட்டுள்ள கட்டிடத்தினால் விபத்தினை ஏற்படுத்தும் வகையில் மேற்படி கட்டிடத்தில் பட்டுக்கோட்டை காமாட்சி மெஸ் என்ற அசைவ உணவகம் இயங்கி வருவதால் தினமும் பல ஆயிரம் பொதுமக்கள் மேற்படி உணவகத்தில் விபத்தினை அறியாமல் உணவருந்தி வருவதால் அந்த விபத்தினை தடுத்திடும் வகையில் மேற்படி உணவகத்தினை தடுத்து நிறுத்தி மேற்படி காமாட்சி மெஸ்ஸின் மீது உடனடியாக உரிய நடவடிக்கை எடுத்திட வேண்டுகின்றேன். கடந்த 24.10.2019ம் ஆண்டு முதல் ஹோட்டல் ஆலியா சட்டத்திற்கு புறம்பான வகையில், விதிகளை மீறி கட்டிய கட்டிடங்களை கொண்டு இயங்கி வருகின்றது.
மேற்படி கட்டிடத்தின் உரிமையாளர்கள் அரசியல் மற்றும் பொருளாதார பின்புலம் உள்ள நபர்கள் என்பதாலும், எதையும் துணிச்சல் மனம் கொண்டவர்கள் என்பதால் மேற்படி கட்டிடத்தினை கட்டிட அனுமதி பெறாமலும், தொழில் உரிமம் பொய்யான காரணங்கள் கூறி பெற்றும், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியத்திடம் உரிய அனுமதி பெறாமலும் முறைகேடான வழியில் சம்பாதிப்பதற்காக அரசின் விதிமுறைகளை மதிக்காமலும் பின்பற்றாமலும், கட்டிடம் அனுமதி, மாசு கட்டுபாட்டு வாரியத்திடம் அனுமதி பெறாமலும், தஞ்சாவூர் மாநகராட்சிக்கு வரவேண்டிய வருமானத்தை திட்டமிட்டே வருமான இழப்பு ஏற்பத்தியதை ஆய்வு செய்து உண்மையின் அடிப்படையில் அவர்களிடமிருந்து தஞ்சாவூர் மாநகராட்சிக்கு செலுத்தவேண்டிய வரிகளை மீட்டெடுத்து தண்டத்தொகையுடன் வசூல் செய்தும், உடனடியாக சம்பந்தப்பட்ட அலுவலர்கள் கள ஆய்வு செய்தும், தொழில் உரிமம் பெறாமல் இயங்கிவரும் ஹோட்டல் ஆலியா மற்றும் அந்த கட்டிடத்தினை உரிய கட்டிட அனுமதியின்றி கட்டியுள்ள கட்டிடத்தை எப்பொழுது வேண்டுமானாலும் பொதுமக்களுக்கு விபத்து ஏற்படுத்தும் நிலையில் உள்ள கட்டிடத்தினை சட்டத்திற்கு புறம்பாக கட்டியுள்ள கட்டுமானத்தினை இடித்து அப்புறப்படுத்த உரிய சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் பணிவுடன் கேட்டுக் கொள்கின்றேன். தாங்கள் மேற்படி ஹோட்டல் ஆலியா சட்டத்திற்கு புறம்பாக கட்டியுள்ள கட்டுமானத்தை இடித்து அப்புறப்படுத்தாவிட்டால் பல உயிர்சேதம் ஏற்படுத்தி அரசிற்கு களங்கம் விளைவிக்கும் சூழல் ஏற்படும் என்பதால் உடனடியாக நடவடிக்கை எடுத்து அதனை சட்டத்தின்படி எனக்கு தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன் என்று கடந்த 05.04.2024ம் தேதியிட்ட மனுவின் மூலம் எதிர் மனுதாருக்கும் அவரது மேல் அதிகாரிகளுக்கும், மாவட்ட ஆட்சியர் தஞ்சாவூர், மாவட்ட வருவாய் அலுவலர், உட்கோட்ட நிர்வாக நடுவர் தஞ்சாவூர், வட்டாட்சியர் தஞ்சாவூர் ஆகியோருக்கு மனுக்கள் அனுப்பியிருந்தேன். அந்த மனுக்களை அனைவரும் பெற்ற ஒப்புதல் அட்டையின் இத்துடன் தாக்கல் செய்கின்றேன்.

2. தஞ்சாவூர் மாநகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட ஹோட்டல் ஆலியா நிர்வாகம் மாநகராட்சியில் G+1 என்ற அளவில் அனுமதி பெற்று G+5 என்று எதிர்மனுதாரர் உரிய அதிகார அமைப்பாக இருப்பதாலும், அவரது நிர்வாகத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டியதை இதுநாள்வரை நடவடிக்கை எடுக்காமலும் அலட்சியபோக்கோடும்,

சட்டத்தினை மதிக்காமலும், எதிரியோடு இணைந்து கொண்டு மாநகராட்சிக்கு வரவேண்டிய வருமான இழப்பிற்கு உறுதுணையாக இருந்து கொண்டு தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளர் இருந்து வருகின்றனர்.

3. நான் கொடுத்த புகாரின் உண்மை தன்மையின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்காமல் இதுநாள்வரை 60 நாட்களுக்கு மேலாக நடவடிக்கை இன்றியும், மனுதாரரின் கோரிக்கைகளை அரசு அதிகாரிகள் 30 நாட்களுக்கு எடுக்க வேண்டிய அரசாணையின்படி நடவடிக்கை எடுக்காமல் எதிரியினை பாதுகாக்கும் நோக்கில் மாநகராட்சி அதிகாரிகள் செயல்பட்டு வருகின்றனர்.

மேலும், தகவல்பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் நான் கொடுத்த புகாரின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை தகவல்களாக கோரிய தகவல்களுக்கும் இதுநாள்வரை எந்தவொரு நடவடிக்கையின்றி பதிலும் அனுப்பாமல் எதிரியினை காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் மாநகராட்சி ஆணையாளர் இருந்து வருகின்றார்.

4. நான் கடந்த 05.07.2024ம் தேதியன்று மாநகராட்சி ஆணையரை நேரில் சென்று நான் கொடுத்த மனுவின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தெரிந்து கொள்ள என்னுடன் எனது நண்பர்கள் பா. துரை, சி. சிவகுமார் ஆகியோர் சென்றிருந்தோம். 1.30 மணி நேரத்திற்கு மேலாக காக்க வைத்து ஒரு பொய்யான தகவலை எனக்கு தகவல் பெறும் உரிமைச் சட்டத்தில் பதில் அனுப்பியதாகவும், மேற்படி ஆலியா ஹோட்டலுக்கு ஆதரவாக செயற்பொறியாளர் செயல்பட்டு தஞ்சாவூர் மாநகராட்சியில் 1200 Unauthorized Building இருக்கு இதை மட்டும் ஏன் கேக்கறீங்க என்று கேட்டார். நீங்க புகார் செய்ற கட்டிடத்தை என்னால் நடவடிக்கை எடுக்க முடியாது என்றும், நோட்டீஸ் அனுப்பியிருக்கோம் உடனடியாக எதுவும் செய்யமுடியாது என்று அலட்சியபோக்கோடு கூறினார். அதற்கு எனக்கு எது தெரிந்திருக்கோ அதைத்தான் கேட்கமுடியும் என்றதற்கு, அதற்கு செயற்பொறியாளர் அந்த ஹோட்டலிருந்துதான் என்னை எதுவும் கவனிக்கல என்று சத்தம் போட்டார். மேலும், ஆணையர் அவர்கள் நீங்கள் எங்க வேணும்னாலும் போங்க உயர்நீதி மன்றம், உச்சநீதிமன்றம், தகவல் ஆணையம் என்று கூறினார். வேறுவழியின்றி தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்படியான பதிலை மட்டும் பெற்றுக் கொண்டு வந்தேன். மேற்படி தகவல்கள் எனக்கு அஞ்சல் அனுப்பப்பட்டதாக கூறிய தகவல் அதன்பிறகு, தேதியிட்டு எனக்கு தபால் மூலம் இரண்டுநாள் கழித்துதான் வந்தது. நான் அனுப்பிய புகார் மனுவின் மீது நடவடிக்கை எடுக்காமலும், சட்டத்திற்கு புறம்பாக கட்டிய கட்டிடத்தின் உரிமையாளருக்கு ஆதரவாக செயல்பட்டுவரும் மாநகராட்சி ஆணையர் மற்றும் செயற்பொறியாளர் ஆகியோர் தனது கடமையினை ஆற்றாமலும், பொறுப்பில்லாமலும் பதில் கூறினார்கள். ஐயா அவர்கள் நான் கொடுத்த புகாரின் மீது உரிய நடவடிக்கை எடுக்காத மாநகராட்சி ஆணையர் அவரது சகாக்களான செயற்பொறியாளர், தஞ்சாவூர் மாநகராட்சி ஆகியார்கள் மீது உரிய விசாரணை செய்து நடவடிக்கை எடுக்க வேண்டுகின்றேன். இல்லையென்றால் என் மனுவில் கூறியுள்ளதுபோல் பணம் உள்ளவர்களும், அதிகாரம் பெற்றவர்களும் சட்டத்தினை மதிக்காமலும், நடைமுறைப்படுத்தாமலும் இருப்பதால் அரசிற்கு வருமான இழப்பு மட்டுமில்லாமல் அனுமதி பெறாமல் பெற்ற கட்டிடத்தினால் உயிர்சேதமும் வாய்ப்பு உள்ளதால் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுகின்றேன்.

எனது தரப்பு ஆவணங்களாக நான் எதிர்மனுதாரர் மற்றும் அவரது மேல் அதிகாரிக்கு அனுப்பிய கோரிக்கை மனு, ஒப்புதல் அட்டை, தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் அனுப்பிய மனு, மேல்முறையீட்டு மனு, தஞ்சாவூர் ஆலியா ஹோட்டல் G+1 மட்டுமே பெறப்பட்ட அனுமதி கடிதம், சாலை போக்குவரத்து இடையூறு ஏற்படுத்தும் வண்ணம் உள்ள புகைப்படம், அனுமதியின்றி கட்டப்பட்ட கூடுதல் கட்டிடத்தின் புகைப்படம் ஆகியவற்றை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கின்றேன். ” என தெரிவித்துள்ளார்.

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம் முறைமன்ற நடுவ 13.08.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையாளர் கடிதம் ந.க. எண் 4221/2024/எம்சிஎப்6, நாள் 10.09.2024–ன் அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்:

"மனுதாரர் திரு. பொன் தம்மபாலா என்பவர் தஞ்சாவூர் மாநகரம், வி.பி. கார்டன் எண் 1/3–ல் இயங்கி வரும் ஹோட்டல் ஆலியா குறித்து நடவடிக்கை எடுக்க 05.04.2024 மற்றும் 29.06.2024–ல் புகார் அளிக்கப்பட்டும், இப்புகார் மனு மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரம் குறித்து தகவலாக வழங்க 23.05.2024 நாளிட்ட கடிதம் வாயிலாகவும் இம்மாநகராட்சியை கேட்டுக் கொள்ளப்பட்டது.

இம்மாநகராட்சியால் மனுவில் குறிப்பிட்டுள்ள கட்டிட உரிமையாளருக்கு கட்டிட உரிமம் பெற்ற ஆவணங்கள் 3 நாட்களுக்குள் சமர்ப்பிக்க நகர் ஊரமைப்பு சட்ட விதிகளின்படி தஞ்சாவூர் மாநகராட்சி 20.06.2024–ம் தேதியில் அறிவிப்பு (Notice-I) அனுப்பப்பட்டது.

மனுதாரரின் மனுவின் மீது எடுக்கப்பட்ட மேற்படி நடவடிக்கை விபரம் குறித்து தஞ்சாவூர் மாநகராட்சியின் 02.07.2024–ம் தேதிய கடிதம் நகல் மனுதாரரால் 05.07.2024–ம் தேதியில் நேரில் பெற்றுக் கொள்ளப்பட்டது.

மனுதாரரால் இம்மாநகராட்சியின் கடிதம் பெறப்பட்ட தேதிக்கு முன்னரே 29.06.2024–ம் தேதியில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் இம்மாநகராட்சிக்கு மேல்முறையீடு செய்யப்பட்டது.

இதன் பின் நகர் ஊரமைப்பு சட்ட விதிகளின்படி கட்டிட உரிமையாளருக்கு 24.07.2024–ம் தேதியில் கட்டிடத்தை பார்வையிட 31.07.2024ம் தேதி நிர்ணயம் செய்து அறிவிப்பு (Notice-II) அனுப்பப்பட்டது.

இந்நிலையில் மனுதாரரால் மேற்படி கட்டிடத்தின் மீது உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கின் 21.08.2024–ல் தேதிய தீர்ப்பாணையில் மாநகராட்சியால் வழங்கப்பட்ட அறிவிப்பை ஏற்று உரிய சட்ட விதிகளின்படி மேற்படி அனுமதியற்ற கட்டுமானத்தை அகற்றிட உத்தரவிடப்பட்டுள்ளது.

கட்டிட உரிமையாளர் அரசு செயலாளர் வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை அவர்களுக்கு 20.08.2024–ம் தேதியில் மேல்முறையீடு செய்யப்பட்டு அதற்கான ஒப்புகை அட்டை நகல் இம்மாநகராட்சிக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இவ்வலுவலகத்தால் கட்டிட உரிமையாளருக்கு 30 நாட்களுக்குள் கட்டிட அனுமதியளிக்கப்பட்டதன்படி கட்டிடம் மாற்றி அமைக்கப்படாவிட்டால் கட்டிடம் மூடி முத்திரையிடப்படும் என தெரிவித்து 27.08.2024–ல் நகர் ஊரமைப்பு சட்ட விதிகளின்படி அறிவிப்பு (Notice-IV) வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்ற விபரத்தை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

4. மேலும், தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையர் தனது 21.04.2025 நாளிடப்பட்ட கடிதம் ந.க. எண் 4221/2024/எம்சிஎப்6–ன் அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மனுதாரர் திரு.பொன் தம்மபாலா என்பவர் தஞ்சாவூர் மாநகரம் வி.பி கார்டன் எண்.1/3ல் இயங்கி வரும் ஹோட்டல் ஆலியா கட்டிடம் சட்டத்திற்கு புறம்பாக கட்டப்பட்டுள்ளதாகவும், இதனை இடித்து அகற்றவும் புகார் அளிக்கப்பட்டது.

இப்புகார் மனு மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை விபரம் குறித்து கேட்டுக் கொண்டதற்கு இணங்க இவ்வலுவலக கடிதத்தில் அனுமதிக்கு மாறாக கட்டப்பட்ட மேற்படி கட்டிடத்திற்கு கட்டிட உரிமையாளரால் அரசு செயலாளர், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற

வளர்ச்சி துறை அவர்களுக்கு 20.08.2024ம் தேதியில் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது எனவும், கட்டிட உரிமையாளருக்கு நகர் ஊரமைப்பு சட்ட விதிகளின்படி அறிவிப்பு (Notice IV) 27.08.2024ல் வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது எனவும் தெரிவிக்கப்பட்டது. மேற்கண்ட மேல் முறையீடு தொடர்பாக அரசிடமிருந்து ஆணை வந்திருந்தால் அதன் நகலினை பெற்று அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

கட்டிட உரிமையாளரால் மேற்படி கட்டடத்திற்கு சட்டப்படி அரசுக்கு மேல் முறையீடு செய்துள்ளதாகவும் அதுவரை நடவடிக்கை எடுக்க தடை உத்தரவு கோரியும் கட்டிட உரிமையாளரால் சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண்.W.P.(MD) 22599/2024ன் தீர்ப்பாணை நாள் 20.09.2024ல் அரசு முதன்மை செயலாளர் அவர்களால் தீர்ப்பாணை கிடைக்கப் பெற்ற 12 வார காலத்திற்குள் மேற்கண்ட மேல் முறையீட்டு மனு மீது உரிய உத்தரவு பிறப்பிக்க தெரிவிக்கப்பட்டது.

அரசாணை எண் 5, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள் 24.01.2025ல் கட்டிட உரிமையாளரின் மேல் முறையீட்டு மனு நிராகரித்து உத்திரவிடப்பட்டது.

எனவே மேற்படி கட்டிடத்திலுள்ள பொருட்களை 3 நாட்களுக்குள் காலி செய்யக் கோரி இவ்வலுவலக அறிவிப்பு ந.க.எண்.4221/2024/எப்6, நாள் 11.03.2025. வாயிலாக கட்டிட உரிமையாளருக்கு தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் கட்டிட உரிமையாளரால் கட்டிடத்தை சுற்றி திறவிடம் மற்றும் வாகன நிறுத்துமிடம் ஆகியவைகளை சரி செய்ய கால அவகாசம் வழங்க கோரி 07.03.2025ம் தேதியில் மனு கொடுத்துள்ளாகவும், இம்மனுவை கருத்திற் கொள்ள உரிய உத்தரவிடக் கோரி கட்டிட உரிமையாளரால் சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு W.P.(MD) No.6716/2025-ல் அரசு செயலர், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நகர் ஊரமைப்பு இயக்குநர், இம்மாநகராட்சி ஆணையர், உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் ஆகியோர்களை பிரதிவாதிகளாகச் சேர்த்து தொடரப்பட்ட வழக்கு நடைபெற்று வருகிறது என்ற விபரத்தை பணிவுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.'' என தெரிவித்துள்ளார்.

5. தற்போது, தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையர் தனது 21.07.2025 நாளிட்ட கடிதம் ந.க. எண் 4221/2024/எம்சிஎப்.6–ல் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"தஞ்சாவூர் மாநகரம் வி.பி. கார்டன் எண் 1/3ல் அனுமதிக்கு மாறாக கட்டப்பட்ட ஹோட்டல் ஆலியா கட்டிடத்தின் மீது உரிய சட்ட விதிகளின் படி இம்மாநகராட்சியால் அறிவிப்புகள் வழங்கி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் கட்டிட உரிமையாளரால் 27.03.2025 நாளிட்ட கடிதத்தில் மேற்படி கட்டிடத்தினை விதிமுறைகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்த ஏதுவாக அருகிலுள்ள இடங்களை கிரையம் பெறும் நடவடிக்கைகள் நடந்து வருவதாக தெரிவித்து இதற்கான பரிந்துரைகள் வழங்க விண்ணப்பிக்கப்பட்டுள்ளதாகவும், இவ்விண்ணப்பத்தின் அடிப்படையில் உரிய கால அவகாசம் வழங்க கோரி இம்மாநகராட்சி ஆணையர், உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் ஆகியோர்களை முறையே 4, 5 பிரதிவாதிகளாகச் சேர்த்து தொடரப்பட்ட வழக்கு W.P.(MD) No.6716/2025-ன் தீர்ப்பாணையில் அனுமதியற்ற கட்டுமானத்தை இடிக்க உத்தரவிடப்பட்டு வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

எனவே, தஞ்சாவூர் மாநகராட்சி கடிதம் ந.க. எண் 4221/2024/எம்சிஎப்6 நாள் 21.07.2025–ல் மீண்டும் அனுமதிக்கு மாறாக கட்டப்பட்ட கட்டிடத்தை மூடி முத்திரையிட ஏதுவாக கட்டிட உரிமையாளருக்கு 3 நாட்களுக்குள் கட்டிடத்திலுள்ள பொருட்களை காலி

செய்யக் கோரி அறிவிப்பு வழங்கி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்ற விவரம் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.'' என தெரிவித்துள்ளார்.

6. மனுதாரரின் மனு மற்றும் அவர் சமர்ப்பித்துள்ள ஆவணங்கள், தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையரின் 10.9.2024, 21.04.2025 மற்றும் 21.07.2025 அறிக்கைகள் ஆகியவை இம்முறை மன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விபரங்கள் கண்டறியப்பட்டன.

மனுதாரர் மேற்சொன்ன கட்டடத்தின் மீது உரிய நடவடிக்கை எடுக்கக்கோரி மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற மதுரை அமர்வில் தொடரப்பட்ட வழக்கு W.P.(MD) No.20011/2024, 21.08.2024–ம் தேதிய தீர்ப்பாணையில் மாநகராட்சியால் வழங்கப்பட்ட அறிவிப்பை ஏற்று உரிய சட்ட விதிகளின்படி மேற்படி அனுமதியற்ற கட்டுமானத்தை அகற்றிட உத்தரவிடப்பட்டுள்ளது. கட்டிட உரிமையாளருக்கு, தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம், 1971, பிரிவு 56(1)–ன்படி தஞ்சாவூர் மாநகராட்சி 27.08.2024 நாளிட்ட அறிவிப்பு IV–னை (Notice IV) வழங்கியுள்ளது. கட்டட உரிமையாளர் அரசு செயலாளர், வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை அவர்களுக்கு 20.08.2024–ம் தேதியில் மேல்முறையீடு செய்துள்ளார். இதற்கிடையில் கட்டிட உரிமையாளர் மேற்படி கட்டிடத்திற்கு சட்டப்படி அரசுக்கு மேல் முறையீடு செய்துள்ளதாகவும், அது வரை நடவடிக்கை எடுக்க தடை உத்தரவு கோரியும் கட்டிட உரிமையாளரால் மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற மதுரை அமர்வில் தொடரப்பட்ட வழக்கு W.P(MD) No.22599/2024ன் தீர்ப்பாணை நாள் 20.09.2024ல் அரசு முதன்மை செயலாளர் தீர்ப்பாணை கிடைக்கப்பெற்ற 12 வார காலத்திற்குள் மேற்கண்ட மேல்முறையீடு மனுவின் மீது உரிய உத்தரவு பிறப்பிக்க தெரிவிக்கப்பட்டது.

அரசாணை எண்.5, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள் 24.01.2025ல் கட்டிட உரிமையாளரின் மேல் முறையீட்டு மனு நிராகரித்து உத்தரவிடப்பட்டுள்ளது.

எனவே மேற்படி கட்டிடத்திலுள்ள பொருள்களை 3 நாட்களுக்குள் காலி செய்யக் கோரி தஞ்சாவூர் மாநகராட்சி அறிவிப்பு ந.க.எண்.4221/2024/எப்6, நாள் 11.03.2025ன் வாயிலாக கட்டிட உரிமையாளருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கட்டிட உரிமையாளரால் கட்டிடத்தை சுற்றி திறவிடல் மற்றும் வாகன நிறுத்துமிடம் ஆகியவைகளை சரி செய்ய கால அவகாசம் வழங்க கோரி 07.03.2025ம் தேதியில் மனு கொடுத்துள்ளாகவும், இம்மனுவை கருத்திற் கொள்ள உரிய உத்தரவிடக் கோரி கட்டிட உரிமையாளரால் மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற மதுரை அமர்வில் தொடரப்பட்ட வழக்கு W.P.(MD) No.6716/2025–ல் அரசு செயலர், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நகர் ஊரமைப்பு இயக்குநர், மாநகராட்சி ஆணையர், உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் ஆகியோர்களை பிரதிவாதிகளாகச் சேர்த்து தொடரப்பட்ட வழக்கின் தீர்ப்பாணை நாள் 10.06.2025–ல் அனுமதியற்ற கட்டுமானத்தை இடிக்க உத்தரவிடப்பட்டு, வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மேலும், அதனைத் தொடர்ந்து மீண்டும் அனுமதிக்கு மாறாக கட்டப்பட்ட கட்டிடத்தை மூடி முத்திரையிட ஏதுவாக கட்டிட உரிமையாளருக்கு 3 நாட்களுக்குள் கட்டிடத்திலுள்ள பொருட்களை காலி செய்யக் கோரி அறிவிப்பு வழங்கி நடவடிக்கை எடுக்கப்பட்டு

வருகிறது என்பது தஞ்சாவூர் மாநகராட்சியின் அறிக்கை வாயிலாக அறிய முடிகிறது. மனுதாரர் புகாரில் தெரிவித்துள்ள பொருள் தொடர்பாக மாண்பமை உயர்நீதி மன்றத்தால் 10.06.2025 அன்று இறுதி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், அதே பொருள் தொடர்பாக இம்முறைமன்ற நடுவத்தில் தீர்க்கப்பட வேண்டியது ஏதுமில்லை என்று முடிவு செய்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு, செப்டம்பர் 1–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு.பொன் தம்மபாலா,
13–1/1–கே, எஸ்.எம்.எச் காம்பளக்ஸ்,
தெற்குவீதி,
திருத்துறைப்பூண்டி–614 713,
திருவாரூர் மாவட்டம்.
2) ஆணையாளர்,
தஞ்சாவூர் மாநகராட்சி,
தஞ்சாவூர்–613 001.
3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண். 75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.
4) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண். 75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்.
இ.கோ. / உதிரிகள்.

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

4/9/25
செயலாளர்.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
சென்னை–600 032